OPEN ACCESS

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 27.1.2020

Accepted: 29.2.2020

Published: 01.04.2020

Citation:
Sivaramakrishnan, J. (2020). A Note on the Offence, Sentence and Trial in the Medieval Tamil Epigraphy. *Shanlax International Journals of Tamil Research*, *4*(4), 34–43.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.2410

*Corresponding Author:
sivaramanarchaeo@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A Note on the Offence, Sentence and Trial in the Medieval Tamil Epigraphy

**Dr. J.R. Sivaramakrishnan***
*Assistant Professor, Department of History*
*Kunthavai Naacchiyaar Government Arts College*
*Thanjavur, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0003-4974-4302

**Abstract –** Judicial administration was strictly rendered by the organizations at village, town and state level headed by respective authorities and temple authorities in the medieval Tamil polity. At the same time tax evations, misappropriation of public properties, temple properties, accidental and planned murders, assassinations, attempt to suicide, bribing were quite common in those days. There are references for the nature and types of offences, sentences, trials and judicial procedures in the epigraphs. This article reflects such things prevalent in the tamil country during the medieval period.

**Key Words:** Tamilnadu history, Tamil inscription, Crime, Punishment, Justice, Civil case, Village institution, Sathurvedamangalam

**Bibliography**

1. South Indian Inscription
2. Cuddalore District Inscription
3. Sadasivapantaratha, T.V., Pirkala Cholar Varalaru.

# இடைக்காலத் தமிழகக் கல்வெட்டுக்களில் குற்றம், தண்டனை, தீர்வு

*முனைவர் ஜெ.ஆர். சிவராமகிருஷ்ணன்*
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்

***ஆய்வுச் சுருக்கம்*** *– இடைக்காலத் தமிழக வரலாற்றில் அரசுத்துறை சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டது. பல்வேறுத்துறை அதிகாரிகள், ஊர்கள், நகரங்கள், சபைகள், கோயில் நிர்வாகத்தினர் ஆகிய அமைப்புகள் திறம்பட செயல்பட்டு சட்டம், ஒழுங்கு, தர்மநெறி பிறழாமல் கடமையாற்றியுள்ளனர். இருப்பினும் அரசுக்கு வரி செலுத்தாமல் ஏமாற்றுவது, போது நிறுவனங்களின் சொத்துக்களை முறையற்ற வழியில் அனுபவிப்பது, லஞ்சம் வாங்குதல், கோயில் மற்றும் அறநிறுவனங்களில் வைக்கப்பட்ட நிரந்தர இருப்புகளை கையாடல் செய்தல், கொலைக் குற்றங்கள், தற்கொலைக்குத் தூண்டுதல் போன்ற முறை கேடான செயல்களும் நிகழ்ந்துள்ளன. இக்குற்ற நடவடிக்கைகளின் தன்மைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அதிகாரத் துஷ்பிரயோகம் செய்து பிறர் சொத்துக்களை அபகரித்தல். கையூட்டு வாங்குதல். அரசுக்கு வரிசெலுத்தாமல் நிலங்களை அனுபவித்தல், கடமையைச் செய்யாமல் ஏமாற்றுதல். கோயில் நிர்வாக அமைப்பினர், கோயில் வழிபாட்டுக்கென வைத்த நிரந்தர வய்ப்புகளைத் திருடுதல், திட்ட மிடப்பட்ட கொலை, தற்செயல் கொலை, தற்கொலைக்குத் தூண்டுதல், முன்பகை காரணமாக கொலை என குற்றவியல் வழக்குகளை வகைப்படுத்தலாம். கொலையாளிகள் தப்பியோடவே "மூலப்பரிஷத்து" என்னும் ஊர்ச்சபையினர் ஒன்றுகூடி வழக்குகளை உடனுக்குடன் விசாரித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளனர், பிறன்மனை விருப்பக் கொலை, முன்பகைக் கொலை, திட்டமிட்டக்கொலை, தற்கொலை வழக்குகள், தற்செயல்கொலைகள், சிவில் வழக்குகள், வரி யேய்ப்பு நடவடிக்கை போன்றவைகளுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழக வரலாறு, கல்வெட்டுகள், கிராமசபா, குற்றம், தண்டனை, சிவில் வழக்குகள், சதுர்வேதமங்கலம்.*

## முன்னுரை

இடைக்காலத்தமிழக வரலாற்றில் அரசுத் துறை மிகச் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டது. பல்வேறுத்துறை அதிகாரிகள், ஊர், நகர சபைகள், கோயில் நிர்வாகம் ஆகிய அமைப்புகள் திறம்பட செயல்பட்டு சட்டம் ஒழுங்கு, தர்மநெறி பிறழாமல் கடமையாற்றியுள்ளனர். இருப்பினும் அரசுக்கு வரி செலுத்தாமல் ஏமாற்றுவது, பொதுநிறுவனங்களின் சொத்துக்களை முறையற்ற வழியில் அனுபவிப்பது, லஞ்சம் வாங்குதல், கோயில் மற்றும் அறநிறுவனங்களில் வைக்கப்பட்ட நிரந்தர இருப்புகளைக் கையாடல் செய்தல், கொலை குற்றங்கள், தற்கொலைக்குத் தூண்டுதல் என முறை கேடான செயல்களும் ஆங்காங்கே நடந்து உள்ளன. அரசும் இதைக்கண்டறிந்து எதிர்காலத்தில் இது போன்றநிகழ்வுகள்நடைபெறாமல்பார்த்துக் கொண்டது. குற்றங்களைக் கண்டறிதல், தண்டித்தல், தீர்வு என ஏராளமான நிகழ்வுகள் இடைக்காலக் கல்வெட்டில் காணக்கிடக்கின்றன. அவைகளைப் பற்றி ஆராய்கிறது இக்கட்டுரை.

## குற்றங்களின் வகை

இடைக்காலத்தில் அதிகாரக் குவிப்பு மையங்களாக விளங்கிய பிரம்மதேயங்கள், சதுர்வேதமங்கலங்கள், கோயில் நிர்வாகம், கிராம சபை போன்றவற்றில் குற்ற நிகழ்வுகள் நடந்துள்ளதைக் கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன. இக்குற்ற நடவடிக்கைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. அரசின் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் சரியாகக் கணக்கு காட்டாமல் இருத்தல். அதிகாரத் துஷ்பிரயோகம் செய்து பிறர் சொத்துக்களை அபகரித்தல், கையூட்டு வாங்குதல், அரசுக்கு வரி செலுத்தாமல் நிலங்களை அனுபவித்தல், தம் கடமையை செய்யாமல் ஏமாற்றுதல்.
2. கோயில் வழிபாட்டுக்கென வைத்த நிரந்தர வைப்புகளைத் திருடுதல், தாமே அனுபவித்தல்.
3. திட்டமிடப்பட்ட கொலை, தற்செயல் கொலை, தற்கொலைக்கு தூண்டுதல், முன்பகை காரணமாக கொலைகள் என குற்றவியல் வழக்குகளை வகைப்படுத்தலாம்.

இவற்றில் முதல் இரண்டு குற்றங்கள் சிவில் குற்றங்களாகவும் மற்றவை கிரிமினல் குற்றங்களாகவும் கருதலாம். இத்தகைய குற்றங்கள் பற்றிய செய்திகள் கி.பி 9 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 13 ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுக்களில் கிடைகின்றன. குற்றங்களைப் புரிந்தவர்கள் நிறைந்த உரிமைகளும், தன்னாட்சியுரிமை பெற்ற தேவதான, பிரம்மதேய, சதுர்வேதமங்கலத்தை நிர்வாகம் செய்யும் பிராமணர்கள், வழிபாடு செய்து சமயத்தை வளர்க்கும் தேவகண்மிகள் போன்ற அலுவலர்களே பெரும்பாலும் இடம் பெற்றுள்ளனர். சாமான்ய மக்களும் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதையும் காணமுடிகிறது.

## திட்டமிட்ட கொலை

பாண்டிய நாட்டில் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற கொலை வழக்கின் விசாரணை பற்றி சிவகங்கை மாவட்டம், திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணபெருமாள் கோயிலில் உள்ள மூன்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இக்கோயிலில் ஐந்து அலுவலர்கள் இருந்தனர். இவர்களுள் ஒருவர் வாமனபட்டர் என்பவராவார். இவர் ஐப்பசி மாதம் 25 ஆம் தேதி கோயிற் பணிகளை முடித்து கிழக்கு வீதிவழியாகத் தன் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார். அப்பொழுது சத்தியநாவன் என்பவன் தெருவின் இருமங்கிலும் தன் அடியாட்களை ஆயுதங்களோடு நிறுத்திவைத்திருந்தான். பட்டர் இருட்டில் வருவதை அறிந்த அவ்வடியாட்கள் ஆயுதங்களால் தாக்கி கொலை செய்தனர். சத்தியநாவனும் அடியாட்களும் அருகிலுள்ள பன்றித்திட்டுக்குத் தப்பிச் சென்று தலைமறைவாயினர்.

கொலையாளிகள் தப்பியோடவே “மூலப்பரிஷத்து” என்ற சபையினர் ஒன்று கூடினர். சத்தியநாவனுக்குச் சொந்தமான நிலங்கள், வீடுகள், தோட்டங்கள் முதலிய உடைமைப் பொருட்களும் ஆண், பெண் பணியாட்களும் கையகப்படுத்தப்பட்டுச் சௌமிய நாராயணப் பெருமாள் கோயிலுக்கு உடைமையாக்கப்பட்டன. இவ்வழக்கின் தீர்ப்பு கொலை நடந்த பத்து நாட்களுக்குள் வழங்கப்பட்டன. மேலும் கொலையில் தொடர்புடைய மற்றொரு குற்றவாளியான தேவர்கள்நாயன் என்பவன் அயல்நாட்டிற்கு தப்பிச்சென்றதை அறிந்த ஊர்சபை அவனுடைய சொத்துக்களையும் கையகப்படுத்தி கோயிலுக்கு உரிமையாக்கினார். இந்நிகழ்ச்சி நடந்து முடிந்த நான்கு மாதங்களுக்குப்பின் சத்தியநாவன் மகன் சேர்மலைப்பெருமாள் என்பவன் அவ்வூர்க் கோயில் அலுவலர் முதல் பணியாளர்கள் வரை அனைவரையும் ஒருங்கு கூட்டினான். தம் தந்தை செய்தகொலைக்கும் தமக்கும் எந்தத் தொடர்புமில்லை எனவும், தாம் நிரபராதி என்றும், உடைமைகளின் பறிமுதலால் தாம் பெருந்துன்பத்திற்கு ஆளாகியிருப்பதாகவும் ஊர்ச்சபை கையகப்படுத்திய நிலங்கள், வீடுகள், தோட்டங்கள், பணியாளர்கள் முதலிய அனைத்தையும் மீள அளிக்க வேண்டுமென்றும்,

அதற்கு ஈடாகக் கோயிலுக்கு எண்ணூறு பணம் கொடுப்பதாகவும் விண்ணப்பம் செய்தான்.

அவனுடைய வேண்டுதல் விண்ணப்பத்தில் உண்மையிருப்பதை ஊர்ச்சபையோர் உணர்ந்தனர். அவ்விண்ணப்பத்தையும் ஊர்ப் பொது மக்களின் பரிந்துரையையும் ஊர்ச் சபை ஏற்றுக்கொண்டது. கோயிலுக்கு வீரகேரள மலையரையன் சந்தி என்ற கட்டளையைத் தொடர்ந்து நிறைவேற்றி வைக்கவேண்டும் என்ற உறுதிப்பாட்டின் அடிப்படையில் சேர்மலைப் பெருமாளுக்கு உடைமைகள் அனைத்தும் மீள வழங்கப்பட்டன.

## பிறன்மனை விருப்பக் கொலை

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம் ஜம்பையில் உள்ள சம்புநாதர் கோயிலில் முதலாம் இராஜராஜனின் கி.பி 1013 ஆண்டில் வெளியிடப்பட்ட கல்வெட்டில் பிறன்மனை விருப்பத்தால் நடந்த கொலை பற்றிக் குறிப்பிடுகிறது. பாலைப்பந்தல் என்னும் ஊரை சார்ந்த அங்காடி பொற்றாமன் வாணிபம் செய்து வந்தான். அவன் சீமாதேவி என்னும் பெண்ணை தன் வாழ்க்கைத் துணைவியாக கொண்டிருந்தான். நாவலூர் என்ற கிராமத்திலிருந்து இவ்வூரில் வாழ்ந்துவந்த சீராளன் என்பவன் சீமா தேவியை அடைய விரும்பினான். ஒருநாள் நள்ளிரவில் சீமாதேவியை வண்புணர்க்குள்ளாக்கும் நோக்கில் வீட்டில் புகுந்து கட்டாயப்படுத்தி இழுத்தான். இந்நிகழ்வை நேரில் பார்த்த அங்காடிப் பொற்றாமன் சினம் கொண்டு சீராளனைக் குத்தி கொன்றான்.

இவ்வழக்கை விசாரித்த ஊர்ச்சபையோர் அங்காடிப் பொற்றாமனின் செயல் மனவெழுச்சியால் நிகழ்ந்ததாகக் கருதினர். இருப்பினும் சீராளனைக் கொன்ற குற்றத் திற்காக ஒரு நந்தா விளக்கைச் சூரிய சந்திரர் உள்ளவரை இவ்வூர் கோயிலில் எரிக்க வேண்டுமென ஆணையிட்டனர். ஊர் சபையோர் கணவனை இழந்த சீராளனின் மனைவியை அணுகி இத்தீர்ப்பிற்கு இசை வையும் பெற்றனர்.

## முன்பகைக் கொலை

கி.பி.1127 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விக்கிரம சோழனின் ஒன்பதாம் ஆட்சியாண்டு கல்வெட்டில் இராஜேந்திரசோழ வளநாடு பெண்ணைத் தென்கரை நாட்டில் இருந்த கடம்பூரில் நிகழ்ந்த கொலைச் சம்பவத்தைப் பற்றி விவரிக்கிறது. கடம்பூரில் வாழ்ந்த கூடலுடையான் குளத்தான் சேந்தன் என்பவனுக்கும், பிச்சன்பன்மன் கண்டன் என்பவனுக்கும் பகை மூண்டிருந்தது. முன்பகைக் காரணமாக இருவரும் சண்டையிட்டுக் கொண்டனர். அப்போது கூடலுடையான சேந்தன் முட்டிக்குத்தியதில் பிச்சன்பன்மன் கண்டன் இறந்தான். இவ்வழக்கு ஊர்ச் சபையோரிடம் வந்தது. பன்மன் கண்டனின் தந்தை, பிச்சன்பன் மனைவியும், உடன் பிறந்த தம்பியான பெரியனையும், அவன் தம்பி முனையானையும், இளையான் அக்களனையும் அழைத்துப் பேசினர். அவர்கள் அனைவரும் கூடலுடையான் சேந்தன் செய்த கொலைக் குற்றத்திற்காக அவனை அறச்செயல் செய்ய வேண்டினர். அவர்களுடைய அனுமதி பெற்ற சபையினர் ஊர் வழக்கப்படி உரியன செய்வதாக உறுதியளித்தனர். இக்குற்றத்திற்காகச் சேந்தனிடம் தண்டமாக முப்பத்திரண்டு பசுக்களைக் கைக்கொள்ளலாம் என முடிவெடுத்தனர். அம்முடிவைப் பன்மன் கண்டனின் குடும்பத்தார் ஏற்றுக்கொண்டனர். சேந்தனும் அத்தீர்ப்புக்கு கட்டுப்பட்டு முப்பத்திரண்டு பசுக்களைக் கொடுத்தான்.

## தற்கொலை வழக்குகள்

கி.பி.1055 ஆம் ஆண்டு முதலாம் இராஜேந்திர சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டில் இராஜேந்திர சோழ வளநாட்டின் பெண்ணை ஆற்றின் தென்கரையில் கூகுர்ப்பாடி என்னும் ஊர் இருந்தது. இவ்வூரில் வீரபுத்திரன் என்பவனின்

அன்னை சேந்தன் உமையாளும் வாழ்ந்து வந்தாள். அவரை வரிசெலுத்த வேண்டுமென அவ்வூர் அரசு அலுவலரான பழங்கூரன் குன்றன் என்பவன் வற்புறுத்தினான். அனைத்து வரிகளையும் சேந்தன் உமையால் செலுத்தி விட்டதாகவும் எதற்கும் வரிசெலுத்த வேண்டியதில்லை எனவும் மறுத்துக்கூறிவிட்டாள். பழங்கூரன் உமையாளை அரசன் முன்பு நிறுத்தி வரியை மீண்டும் செலுத்த செய்தான். அச்செயலால் மனம் நொந்த சேந்தன் உமையாள் நஞ்சு குடித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

நான்கு திசைகளிலிருந்த பதினெண் ஊர்களைச்சேர்ந்த ஊர்ச்சபையினர் அனைவரும் கூடினர். வரி செலுத்திய சேந்தன் உமையாளை அரசன் முன்பு கொண்டு நிறுத்தி அவரை மீண்டும் வரி செலுத்தச்செய்து, அவமதிப்புக்குள்ளாக்கிய செயலே தற்கொலைக்குக் காரணம் என உணர்ந்தனர். பழங்கூரன் குன்றனுக்கு ஊர்ச்சபையோர் முப்பத்திரண்டு பொற்காசுகளைத் தண்டம் விதித்தனர். அக்காசுகளை முதலீடாகக் கொண்டு அதன் வட்டியில் நாள்தோறும் உழக்கெண்ணெய் வாங்கி கோயிலில் விளக்கு எரிக்க ஆணையிட்டனர்.

இரண்டாம் இராஜேந்திரசோழனின் நான்காம் (கி.பி.1055 - 1056) ஆட்சியாண்டில் புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் திசை ஆயிரத்து ஐநூற்றுவர் என்ற வணிகக் குழுவினர் இருந்தனர். இவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி கட்டிலேறுவதற்குத் (திருமணச் சடங்கு) தயாராக இருந்தாள். தில்லைக்கூத்தனும், மற்றொருவனும் அதற்கு தடையாக இருந்து மணமகனுக்கு இராமன் என்வனின் மகளைத் திருமண ஏற்பாடு செய்தனர். இதனால் முதல் பெண் நஞ்சு குடித்து உயிரை மாய்த்துக்கொண்டாள். இதனை அறிந்த திசை ஆயிரத்து ஐநூற்றுவரும், பெருநிரவியரும் இதற்குப் பிராயச்சித்தமாக சங்கு பரமேஸ்வரியை எழுந்தருளுவித்து இவ்வூர் மாதேவர்க்கு மூன்று சந்தியும் விளக்கெரிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

### தற்செயல் கொலைகள்

திண்டிவனம் வட்டம், கிடங்கில் பக்தபிரஹதீஸ்வரர் கோயிலில் உள்ள முதலாம் குலோத்துங்கசோழனின் 21 வது (கி.பி. 1091) ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டு தற்செயல் கொலையைப் பற்றி கூறுகிறது. ஒய்மாநாட்டு குடிப்பள்ளி கிராமத்தில் மாலன் என்பவனின் மகன் கற்றளி என்னும் ஆறு வயதுச் சிறுவன் இருந்தான். இவன் ஒருநாள் கையில் அரிவாளைக் கொண்டு மரத்தை வெட்டிக்கொண்டிருந்தான். அப்போது இவ்வூர் பொன்மகனார் மகன் நக்கன் என்னும் ஏழுவயதுச்சிறுவன்விளையாட்டாகக்கையை நீட்ட கையை வெட்டிவிட்டான். சிறுவன் நக்கன் இறந்து விட்டான். தன்மகன் கற்றளி கையை வெட்டி மரணத்தை ஏற்படுத்திய செயலுக்காக மாலன் மனம் நொந்து கோயிலுக்கு விளக்கெரிக்க நாள்தோறும் உழக்கெண்ணெய் அளித்துள்ளான்.

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் எலவனாசுர் அர்த்தநாதீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள இரண்டாம் இராஜாதிராஜ சோழனின் பத்தாம் ஆட்சியாண்டை சார்ந்த (கி.பி. 1173) கல்வெட்டு தற்செயல் கொலை வழக்கை பற்றி குறிப்பிடுகிறது. ஜனநாதவளநாட்டு பரனூர்க் கூற்றத்து மாடுரில் வாழ்ந்த கோச்சாத்தன்காமன் என்பவனின் அகமுடையாள் ஏதோ காரணத்திற்காக தன் மகள் மீது கடும் கோபத்துடன் அரைமனைக் (அரிவாள்மனையாக இருக்கலாம்) கோலை வீசினாள். அக்கோலானது இலக்கு மாறி இதேவூரை சார்ந்த மிண்டன்காமன் என்பவனுடைய மகள் மீது பட்டது. காயமுற்ற அப்பெண் இருபது நாள்வரை இன்னல்பட்டு இறந்தாள். இவ்வழக்கு ஊர்ச்சபைக்கு வந்தது. குற்றங்களை தீர விசாரித்த சபையோர் கோச்சாத்தன்காமனின் அகமுடையாள் உயிர்கொலை செய்யும்

நோக்கில் அரைமனைகோலை எறியவில்லை. இந்நிகழ்வு எதிர்பாராமல் கைப்பிழைப்பாடாக நடந்த விபத்து என்று தீர்ப்பு கூறினார். இருப்பினும் கோச்சாத்தன்காமனிடம் முப்பத்திரண்டு பசுக்களை தண்டமாக பெற்றனர். இப்பாவத்திற்குக் கழுவாயாக கோச்சாத்தன் அகமுடையாள் கோயிலுக்கு விளக்கு வைக்க இருதிறத்தாரும் ஒப்புக்கொண்டனர்.

இதேகோயிலில் உள்ள மூன்றாம் இராஜராஜசோழனின் பத்தாவது ஆட்சியாண்டு (கி.பி.1226) கல்வெட்டு மற்றொரு தற்செயல் கொலை வழக்கைப்பற்றி கூறுகிறது. வடநாரையூர்க் கூற்றுத்து வாணபிராட்டியிலிருக்கும் ஆறிக்குளத்தூருடையான் முடிகொண்டான் காரியான வீரபாலன் என்பவன் பன்றி வேட்டையாட இரவு காட்டிற்குச் சென்று அம்பு எய்ய, அது குறிதவறிப் புஞ்ச நூற்பள்ளிபடியன் கந்தனான புஞ்ச நூற்போயன் மகன் தில்லையாந் ஆறாயிரப்போயன் மீது பட அவன் இறந்து விட்டான். இவ்வழக்கை விசாரித்த ஊர் சபையோர் இச்சம்பவத்திற்கு ஏதேனும் முன்பகை உள்ளனவா என்பதைத் தீரவிசாரித்தனர். இந்நிகழ்வு தற்செயலாக நடந்ததே தவிர பகையேதும்மில்லை என்று தீர்ப்பு கூறினர். இதன் கழுவிரக்கமாக வீரபாலன் எலவனாசுர் கோயிலுக்கு முப்பத்திரண்டு பசுக்களைத் தானமாகக் கொடுத்துள்ளான்.

**சிவில் வழக்குகள்**

பண்டையகால அரசுக்கு நிலவருவாயே நிரந்தர வருவாயாகும். "அறு கூறினால் புரவு மாயாதியும் பொன்னும் பெறுமாறு சோழகோன்" என்ற கல்வெட்டு வரியில் ஆறில் ஒருபங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டதை அறிய முடிகிறது. இதில் "புரவு" என்ற சொல், நிலவரியைச் சுட்டுவதாகும். இவ்வரிகளை வசுல் செய்வதற்காக ஒவ்வொரு ஊரிலும் புரவுவரி சீகரணம், புரவு வரியார், புரவுவரித் திணைக்களநாயகம் என்ற பெயரில்அதிகாரிகள்நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மக்களிடம் நிலவரியை வசுல் செய்து அரசுக்கு செலுத்த வேண்டும். இருப்பினும் வரியேப்பு செய்பவர்கள், பொய்க்கணக்கு எழுதும் அதிகாரிகளும் இருந்துள்ளனர். இவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிக் காண்போம்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம் ஓமாம்புலியூர் வியாக்ரபுரீஸ்வரர் கோயிலில் உள்ள இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டில் நிலவரி செலுத்தாதவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி கூறுகிறது. ஸ்ரீஉலகளந்த சோழச்சதுர்வேதிமங்கலத்திலிருந்த சிலர்நிலத்தின்மீதான வரியைச் செலுத்தாமல் ஊரைவிட்டுச் சென்று விட்டனர். இவர்களுக்கு இதேவூரைச் சேர்ந்த பிராமணர்கள் சிலர் பிணையளித்திருந்தனர். பிணையளித்தவர்களும் வரியை செலுத்தவில்லை. இதனால் வரியை உடனே செலுத்துமாறு இவர்களுக்கு ஆணையிடப்பட்டது. ஆணைப்படி வரிகட்ட தவறியதால் பிணைஅளித்தவர்களின் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இவர்களின் நிலத்தை பிணைவிளையாகப் பெற்றுக்கொள்ள யாரும் முன்வராததால் நிலத்தின் ஒரு பகுதியினை கோயில் நிர்வாகத்தினரே விலைக்கு பெற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். கோயில் பயன்பாட்டில் இல்லாமல் இருந்த ஆபரணங்களை விற்று நிலங்களை கோயில் நிர்வாகமே வாங்கியது.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள கள்ளப்பெரம்பலூர் கைலாசநாதர் கோயிலில் உள்ள மூன்றாம் இராஜராஜ சோழனின் 19 ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டு பொய் கணக்கு எழுதியதற்காக கொடுக்கப்பட்ட தண்டனையைப் பற்றிக் கூறுகிறது. "நம்மூரில் காணி உடையநாய் கணக்கெழுதி வந்தசேஞலூருடையான் மதளை உத்தமப்பிரியன் எல்லோமுக்கும் மேற்கிராமத்து துரோகியாய் கணக்கெழுதலாகா தொழிகையால் இவனும் இவன் வங்கிஷத்தாரும் இவன் உறவு முறையென்று

வந்து கணக்கெழுதுவார்களாகில் திருவாணை புவன முழுதுடையாராணை” என்ற கல்வெட்டு வரியால் சேஞலூருடையான் மதளை உத்தமபிரியன் என்பவன் பொய்க்கணக்கு எழுதியதை அவ்வூர்ச்சபையோர்தணிக்கைசெய்தபோது கண்டறிந்தனர். உடனே அவனை அரசுப் பணியிலிருந்து நீக்க ஆணையிடப்படடுள்ளது. இனி அவனும், அவனது வழித்தோன்றல்களாக வருவோரும், அவனுடைய உறவினர் என்று சொல்லிக்கொண்டு வருகின்றவர்களுக்கு ஊர்க்கணக்கு எழுத நிரந்தரத் தடை விதிக்க கப்பட்டதையும் அறிய முடிகிறது.

## மெகா வரியெய்ப்பு நடவடிக்கை

பழையவடஆர்க்காடு மாவட்டம் அரக்கோணம் வட்டம், திருமால்புரத்திலுள்ள சோழர் கல்வெட்டில் மெகா வரி யேய்ப்பு முறைகேடு பற்றிக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு நூறு வரிகளை கொண்டது. இவ்வரியேய்ப்பு முதலாம் ஆதித்த சோழனின் 22 ஆவது (கி.பி 893) ஆண்டிலிருந்து, உத்தம சோழனின் நான்காம் (கி.பி 974) ஆட்சியாண்டு வரை ஏறக்குறைய 82 ஆண்டுகள் நடந்துள்ளது. திருமால்புரத்துக் கோயில் வழிபாட்டிற்காக புரவுநெல் 3,000 காடி, இரவு நெல் 561 காடி, பொன்னாக 200 கழஞ்சு, சிற்றியாற்றூர் என்ற ஊரும் தானமாக அளிக்கப்பட்டது. இவ்வூர் நிலங்களில் சங்கப்பாடிகிழான் என்பவனின் நிலம் மட்டும் நீக்கிப் பிற நிலங்கள் அனைத்தும் கொடையாக அளிக்கப்பட்டன.

இந்த ஊரை ஏற்று மேற்கூறிய அளவு வரியைச் செலுத்தும் பொறுப்பைப் புதுபாக்கம் சபையோர் ஏற்றுக்கொண்டனர். இது தொண்டைமானாற்றூர் துஞ்சியனதேவரின் (முதலாம் ஆதித்த சோழன்) 21 ஆட்சிண்டில் கொடுக்கப்பட்டு 22 ஆவது ஆண்டில் சாசனம் செய்யப்பட்டது. ஆனால் இதுபற்றிய விவரம் அரசாங்க வருவாய் கணக்குப் புத்தகத்தில் எழுதப்படவில்லை. ஆனால் இப்படி அரசுக் கணக்கில் எழுதப்படாமல் இருந்த விவரம் பராந்தக சோழனின் நான்காவது ஆட்சியாண்டில் கண்டுபிடிக்கப்பட்டு அரசின் கணக்கில் சேர்க்கப்பட்டது. அதன் பிறகும் புதுப்பாக்கத்துச் சபையோர் கோயிலுக்கு சேரவேண்டிய பொன்னையும், நெல்லையும் கொடுக்காமல் இவ்வரசனின் 36 ஆவது ஆண்டுவரை அதாவது முப்பத்திரண்டு ஆண்டுகள் ஏமாற்றி வந்துள்ளனர். இதனால் கோபமடைந்த அரசன் சபையோரிடமிருந்து சங்கப்பாடிகிழான் முதலிய அனைத்து நிலங்களையும் மீட்டுக் கோயிலின் நேரடி நிர்வாகத்தில் விட்டான்.

ஆனால் இப்படி முன்னர் நீக்கிய சங்கப்பாடிகிழான் நிலத்தைக் கோயிலுக்கு வரியிலிட்டு குடுத்தபின்னரும் அந்த நிலத்தை புதுப்பாக்கதுச் சபையோர் வன்முறையினால் கைப்பற்றி அனுபவித்துக் கொண்டதுடன் கோயிலுக்குச் சேரவேண்டிய இறையையும் கட்டாமல் விடுகின்றனர். இந்த வரியெப்பை எதிர்த்துக் கேட்ட கோயில் அதிகாரிகளையும் அவர்கள் துன்புறுத்தியுள்ளனர். சபையோர்களின் அட்டகாசம் எல்லை மீறியபோது இத்தகவல் அரசனிடம் முறையிடப்படுகிறது. அதனைக் கேட்ட அரசன் கோயில் அதிகாரிகளையும், சபையோரையும் அழைத்து நேரடி விசாரணை செய்தபோது ஊழல் வெளிப்படுகிறது. சபையோர் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்கின்றனர். அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். மேலும் இவ்வழக்கு விசாரணையானது இப்பகுதியின் பிரம்மதேயக் கிழவர்கள், நாட்டார்கள், நகரத்தார்கள், ஊரார்கள், பள்ளிச்சந்தம் மற்றும் பிற சபை அமைப்புகளின் அலுவலர்கள் போன்றோர்களின் முன்னிலையில் நடத்தப்பட்டுள்ளது. மேலும் அப்போது மன்னனுடன் கருமம் ஆராய்கின்ற அதிகாரி ஒருவனும், நடுவிருக்கை, ஆணத்தி, வாய்க்கேழ்வி, ஒலை எழுதும் அதிகாரி, ஓலைநாயகம், புரவுவரி அதிகாரி, உத்தரமந்திரி, வரிப்பொத்தகக் கணக்கு ஆகிய வருவாய் அதிகாரிகளும் உடனிருந்து வழக்கை நடத்தி ஒழுங்குபடுத்தியுள்ளனர். இதிலிருந்து பிரம்மதேய சபையோர்கள் அரசனின் ஆணைகளையே மதியாமல் ஏமாற்றும் துணிச்சல்மிக்கவர்களாக

இருந்துள்ளனர். இவ்வழக்கிற்காக மன்னன் காஞ்சிபுரம் வந்து விசாரணை செய்ததையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

**தண்டனைகள்**

சபையோர் நீதி வழங்குவதில் காலம் தாழ்த்தாமல் உடனுக்குடன் வாதி, எதிர்வாதி ஆகியோரின் முன்னிலையில் விசாரணை செய்து தீர்ப்பு வழங்கினர். மேலும் வாதியின் குடும்பத்தினரை அழைத்து இக்குற்றத்திற்கு என்ன வழிகாணலாம் எனக் கேட்கப்பட்டிருப்பது ஊர்ச்சபையோரின் உயர்ந்த நீதி வழங்கும் பண்பைக் காட்டுகிறது. மேலும் சபையோர் மரண வழக்குகளைக் கையாண்டவிதம் அளப்பரியதாக உள்ளது. காரணம் கொலை குற்றத்திற்கு மரணதண்டனை விதிக்கப்பெறாமல் குற்றவாளி திருந்துவதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கில்தண்டடம்விதித்துஅத்தொகையைக் கோயிலுக்கு விளக்கெரிக்க நிவந்தமாக அளிக்க வேண்டுமென விதியமைத்துள்ளனர். மனிதன் சமுதாய, அரசியல் சட்டங்களுக்கு மேலாகத் தன்னுடைய மனசாட்சிக்குக் கட்டுபட்டவன் ஆவான். கொலைசெய்தல் கொடுமையான செயல் என்று அறிந்தும் மனவெழுச்சியால் அறிவிழந்து அக்கொடிய செயலுக்கு உட்படுகிறான். சூழ்நிலையே ஒருவனைக் குற்றவாளியாக ஆக்குகிறது. இதனை உணர்ந்த சபையோர் கொலைக்குற்றம் செய்தவர்களுக்கு தாம் செய்த தவறை உணர்ந்து சிந்திக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்ற உயரிய கருதுகோளைக் கொண்டிருந்தை அறியமுடிகிறது. குற்றம் செய்தவனை மரணத்தின் மூலம் தண்டிப்பதைவிட அவனைச் சீர்திருத்துவதில்தான் நீதியின் பெருமை நிலைநிறுத்தப்படுகிறது. குற்றங்களுக்கு மரண தண்டனை அளிக்க விதியிருந்தும் 302 இ.பி.கோ வின் கீழ் ஆயுள்தண்டனையாக மாற்றி விதிப்பதற்கு ஒப்பாகக் இக்கல்வெட்டு தீர்ப்புகள் உள்ளன. காலம் தாழ்த்தினால் நியாயம் மறுக்கப்படுகிறது என்பர். கல்வெட்டுக்களில் காலம் தாழ்த்தப்படாமல் நீதி வழங்கியமுறை சிந்திக்க வைப்பதாக உள்ளது.

**தீர்வுகள்**

வேண்டுமென்றே திட்டமிட்டுக் கொலை செய்தமை இன்றைய குற்றவியல் சட்டம் இ.பி.கோ 300 விதிக்குப்பொருந்த வாமனப்பட்டர் சத்தியநாவனால் கொலைசெய்யப் பெற்றான். மரணம் நேரிடும் என்று தெரிந்தே மரணம் நேரிடும் வகையில் ஈடுபட்டமை இன்றைய குற்றவியல் விதி இ.பி.கோ.299 விதிக்குப் பொருந்த சீராளனை அங்காடி பொற்றாமன் கொன்றது. இந்தியக் குற்றவியல் சட்டம் 350 பிரிவில் உடலைத் தாக்குதல் குற்றம் எனக் கூறப்பட்டுள்ளது. கோச்சாத்தன்காமன் அகமுடையாள அரைமனைக் கோல் எறிந்தது, வீர பாலன் அம்பு எய்ந்தது. கற்றளி என்னும் ஆறுவயதுச் சிறுவனின் கையை வெட்டியது போன்ற நிகழ்வுகள் தற்செயலாக வேட்டையாடும் போதோ, சுடும்போதோ, நேரிடக்கூடிய மரணம் இன்றைய குற்றவியல் விதி இ.பி.கோ 304 சட்டப்பிரிவின்படி குற்றமாகும்.

முதலாம் பராந்தகனின் காலத்தில் ஊர்ச் சபைகள் எவ்வாறு குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இயங்கின என்பதை அவனது 19 மற்றும் 21 ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. முதல் கல்வெட்டு ஊர்ச்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் என்னென்ன தகுதிகள் பெற்றிருக்க வேண்டும் என்று தெளிவாக கூறுகின்றது. ஆனால் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அதே ஊரில் நடக்கும் சபை தேர்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் தகுதி, விதிமுறைகள் முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அவ்விதிமுறைகளின் விரீயத் தன்மைகளை நோக்கும் போது, எந்த அளவுக்கு முந்தையகால நிர்வாகத்தில் உறுப்பினர்கள் ஊழல் புரிந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. இதனை உணர்ந்த அரசன் ஊழலை நிரந்தரமாகத் தடுக்கும் விதிகளை ஆராய்ந்து வகுத்தளித்துள்ளான். இதன்மூலம் கிராம நிர்வாகத்திலிருந்த ஊழலின் ஊற்றுக் கண்கள் முழுவதும் அடைக்கப்பட்டன.

முதலாம் பராந்தகனுக்கு பின்பு இராஷ்டிரகூட மன்னன் கன்னரதேவனின் கட்டுப்பாட்டின் கீழ்வந்தது தொண்டைமண்டலம். திடீர் அரசியல் மாற்றத்தால் கிராம சபையில் ஊழல் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக சபையோர் நீதி வழங்கும் முறைக்கான விதிமுறைகளை ஒழுங்குபடுத்தியுள்ளதை அறிய முடிகிறது. உத்திரமேரூரில் மகாசபை பேரம்பலத்தின் முன்புள்ள திண்ணையில் பகல் நேரத்தில் கூடி நீதி வழங்கியதையும், ஊர்ச்சபையோர் எடுத்த சில முடிவுகள் பற்றியும் கன்னரதேவனின் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

1. ஊர்ச்சபையோரால் தண்டிக்கப்பெற்ற குற்றவாளிக்கு விதித்த தண்டத்தொகை அனைத்தையும் உடனே ஊர்சபை வசூல் செய்ய வேண்டும். வசூல் செய்த தொகையை அந்த ஆண்டே கிராமத்தை ஆட்சிசெய்யும் பெருமக்கள் குழுவிடம் கணக்கைக் கொடுத்து பைசல் செய்யவெண்டும்.
2. அவ்வாறு தண்டத்தொகை செலுத்த இயலாமல் தீர்வுபெறாத வழக்கு களைச் சபையோரைக்கொண்டு மீண்டும் தண்டம் விதிக்கச்செய்து முழுத்தொகையும் வசூல் செய்ய வேண்டும்.
3. தண்டனை பெற்ற ஒருவன் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து தன் குற்றமின்மையை மெய்ப்பிக்க விரும்பினாலோ, வேறு சபையோரிடம் தன்னுடைய வழக்கை முறையிட்டு நீதி பெற விரும்பினாலோ, அதற்கும் அக்கிராம சபையினர் ஆவன செய்யவேண்டும். அவ்வூர் நடுநிலையாளரையும், பாடிகாவலரையும் உடன் சேர்த்துப் பேசித் தண்டிக்கப்பெற்ற அதே ஆண்டிற்குள் அவ்வழக்கைத் தீர்த்து வைக்க வேண்டும்.
4. தீர்வுபெறாத வழக்குகளை மீண்டும் சபையோரைக் கொண்டு உடனடியாக தீர்க்க வேண்டும்.
5. கிராம காரியம் செய்வோர் செய்யாத நிலையில் அவர்களுடைய பதவியைப் பறித்துக் காணம் பொன் தண்ட மிட்டனர். மேலும் எவ்வித அநீதிச் செயல்களும் நிகழாமல் வழக்கைத் தீர்த்துக் கொடுக்க உத்திரமேரூர் சபையோர் உறுதியளித்துள்ளனர்.

எனவே பதிவு செய்யப்பட்ட வழக்குகளை உடனுக்குடன் விசாரணை செய்து தீர்ப்பதில் கிராமசபை உறுப்பினர்கள் எந்த அளவிற்கு விவேகத்துடன் செயல்படவேண்டும் என்பதை உத்திரமேரூர் கல்வெட்டின் வாயிலாக அறிய முடிகிறது.

## முடிவுரை

தமிழக வரலாற்றில் இடைக்காலம் என்பது சோழர் காலமாகும். பராந்தக சோழனது காலத்திற்கு பிறகும், இராஜராஜனின் ஆரம்ப காலத்திலும், சோழப் பேரரசின் இறுதி காலக்கட்டத்திலும் அதிகமாக ஊழல் சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. பராந்தகனுக்குப் பிறகு கெடிலக்கரை வரையில் இராஷ்டிரகூடர்களின் ஆளுகையின் கீழ் தொண்டைநாடு சென்றது. இக்காலத்தில்தான் அப்பகுதியில் கிராமசபை, கோயில் நிர்வாகம், சதுர்வேதமங்கலம், பிரமதேயங்களில் ஊழல்கள் மலிந்த நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. அதன்பிறகு முதலாம் இராஜராஜசோழன் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையால் நிலைமை சரி செய்யப்பட்டுள்ளது. மேலும் சோழப்பேரரசின் இறுதி நூற்றாண்டில் ஆட்சி செய்த வலிமை குன்றிய சோழ வேந்தவர்களின் காலத்தில் உள்ளாட்சி அமைப்பினர் ஏதேச்ச அதிகாரம் பெற்றவர்களாகச் செயல்பட்டதை உணரமுடிகிறது. மேலும் 399 ஆண்டு சோழர் ஆட்சியில் வலிமை மிக்க, வல்லமை பெற்ற தலைமையில் ஊழல், குற்றங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதையும் அறியமுடிகிறது.

**துணை நூற் பட்டியல்**


1. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் VII.
2. கடலூரர் மாவட்டக் கல்வெட்டுகள், மடலம் I.
3. Inscriptions Texts of the Pudukottai State.
4. ஐம்பை ஓர் ஆய்வு, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை
5. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் XXII.
6. கல்வெட்டு ஆண்டறிக்கை, மடலங்கள் 1914, 1918, 1927, 1939
7. அருண்மொழி ஆய்வுத் தொகுதி, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
8. ச. கிருஷ்ணமூர்த்தி, வரலாற்றில் எலவானாசூர்க்கோட்டை
9. தி. வை. சதாசிவப்பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு
10. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் XVII.
11. ஆ. கோவிந்தசாமி, அசோகரும் அவருடைய காலமும்.